குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.95/2019

அ.சா.9

2025–ம் ஆண்டு ஜுலை 18–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 09–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தட்சிணாமூர்த்தி | தொழில் | |
| தந்தை பெயர் | பழனிசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.32 மணி,

Accused A1.Kaliyamoorthi A2.Ramasami, Present. Advocate Mr.A.Nagendiran for A1 absent. Avocate Mr.Kanagaraj for A2 absent. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தமிழ்நாடு காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 30.04.2020 ஆம் தேதி பணி ஓய்வு பெற்று, சேலம் ஆண்டிப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். கடந்த 20.08.2018 ஆம் தேதி தாரமங்கலம் வட்ட காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது, அன்றைய தினம் உதவி ஆய்வாளர் அருள்வடிவழகன் என்பவர் காலை 09.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது சாட்சி காவியா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின்பேரில், நிலைய குற்ற எண்.507/2018 சட்டப்பிரிவு 392 இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, எனது பார்வைக்கு வைத்தார். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

2. பின்பு வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அன்புமணி மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். ( **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.9 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.07.18 17:20:50 +0530

3. பின்பு, சாட்சிகள் காவியா, ரமேஷ், சேட்டு, ராமாயி, அப்துல் சமீது, அன்புமணி, சின்னதம்பி மகன் ரமேஷ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு, சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகளை தேடிவந்த நிலையில், 30.09.2018 ஆம் தேதி 18.00 மணியளவில், தாரமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.588/2018 சட்டப்பிரிவுகள் 392, 397, 506(2) என்ற வழக்கில் சம்மந்தப்பட்டிருந்த எதிரி கலியமூர்த்தி என்பவரை 18.00 மணியளவில் கைது செய்து அவரை விசாரித்தபோது, அவர் தாமாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

4. அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை கிராம நிர்வாக அலுவலர் சுகவனம் மற்றும் அவரது உதவியாளர் ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். எதிரி கலியமூர்த்தி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இவ்வழக்கு குற்ற எண்.507/2018 சட்டப்பிரிவுகள் 392 இதச குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது குறித்தும் ஒப்புக்கொண்டு, ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். எனவே அவரை 19.30 மணியளவில் இவ்வழக்கில் கைது செய்தேன்.

5. எதிரி கலியமூர்த்தியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான "**இன்று நான், சின்னப்பம்பட்டி பேங்க் அருகே நின்று கொண்டிருந்தவரிடம் கத்தியை காட்டி .............. பணத்தை .............. என்னிடம் இருக்கும் பணத்தையும் சூரிக்கத்தியையும், நான் பணம்........... வந்த எனது பதிவெண் இல்லாத டி.வி.எஸ். ெஹவி டியூட்டி மோட்டார் சைக்கிளையும் உங்களிடம் ஒப்படைக்கிறேன். என்னை நீங்கள் கூட்டிக்கொண்டு போனால், நானும், ராமசாமியும் ஏற்கனவே பஞ்சுகாளிப்பட்டியில் ஒரு வீட்டில் புகுந்து ............... தாலிக்கொடியையும், தாரமங்கலம் ஜலகண்டாபுரம் ரோட்டில் உள்ள ஒரு வீட்டின் கதவை தட்டி திறந்த ஒரு பெண்ணின் கழுத்தில் போட்டிருந்த தங்க செயினை .............. கொண்டு போய் என் வீட்டில் மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டி உங்களிடம் எடுத்துக் கொடுப்பதுடன், பஞ்சுகாளிப்பட்டியில் நாங்கள் நகையை ............ வீட்டையும், தாரமங்கலத்தில் நகையை ........... வீட்டையும், அடையாளம் காட்டுகிறேன் " என்ற பகுதி மட்டும் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.07.18 17:20:54 +0530

6. பின்பு, மேல்காமாண்டபட்டியில் உள்ள எதிரி கலியமூர்த்தி என்பவரின் வீட்டின் முன்பாக எதிரி கலியமூர்த்தி ஆஜர் செய்த சுமார் 5 பவுன் எடையுள்ள தங்கசெயின் ஒன்றை 20.45 மணியளவில் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். ( **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

7. பின்பு, எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து, வழக்கின் புகார்தாரர் சாட்சி காவியா என்பவரிடம் தகவல் சொல்லி வரவழைத்து, 01.10.2018 ஆம் தேதி சாட்சி காவியா காவல் நிலையம் வந்து, எதிரி கலியமூர்த்தி மற்றும் வழக்கு சொத்துக்களை அடையாளம் காட்டி உறுதிசெய்தார்.

8. பின்பு, எதிரி கலியமூர்த்தி என்பவரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். ( **அந்த படிவம் 91 அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

9. பின்பு, சாட்சி காவியா என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு, 02.10.2018 ஆம் தேதி சாட்சிகள் காளியப்பன் மகன் ரமேஷ், அப்துல் சமது, சேட்டு, ராமாயி ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன்.

10. பின்பு, 14.10.2018 ஆம் தேதி 16.00 மணியளவில் தாரமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.598/2018 சட்டப்பிரிவு 392, 397, 506(2) இதச என்ற வழக்கில் கைது செய்யப்பட்டிருந்த எதிரி ராமசாமி என்பவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கார்த்தி மற்றும் கோவிந்தராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன்.

11. எதிரி ராமசாமி என்பவர் இந்த வழக்கில் குற்ற செயல்களில் ஈடுபட்டது, 1 ஆம் எதிரி கலியமூர்த்தி என்பவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இருந்தும், எதிரி ராமசாமி குற்ற எண்.598/2018 வழக்கில் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் தெரியவந்தது. அவரை இவ்வழக்கில் கைது செய்தேன்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.07.18 17:20:59 +0530

12. பின்பு, எதிரி ராமசாமியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு சாட்சிகள் கார்த்தி, கோவிந்தராஜ் ஆகியோர்களை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு, வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளர் அருள் வடிவழகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 02.12.2018 ஆம் புலன் விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால், எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

13. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை. எதிரிகள் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 02.00 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.07.18 17:21:03 +0530